[1995 ஏப்ரல் 28

485—

பார்த்திபனூரில் பணிமனை அமைத்தல்

*39076—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பார்த்திபனூரில் பணிமனை அமைத்து அங்கிருந்து நரிக்குடிக்கும், மானாமதுரைக்கும், கமுதிக்கும், பரமக்குடிக்கும் பேருந்து இயக்க மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் மூலம் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதி முன்னேற வேண்டுமானால் அங்கு சாலை வசதி, போக்குவரத்து வசதி இன்றியமையாதது என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உணர்ந்து, சாலைப் போக்குவரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதிக நிதி உதவி கொடுத்து நிறைவேற்றி வருகின்ற இந்த நல்ல வேளையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இட்ட கட்டளையை நொடிப் பொழுதில் செய்து வருகின்ற ஆற்றல் பெற்றவர் அமைச்சர் அவர்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் கூறுகின்ற கோரிக்கைகளில், அதிகமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தருகின்ற அமைச்சர் நம்முடைய மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள். என்னுடைய கேள்விக்கு இல்லை என்ற பதில் அளித்து இருக்கின்றார்கள். அவ்வாறு இல்லையென்றாலும்கூட கட் சர்வீஸ் மூலமாக பார்த்திபனூருக்கு பரமக்குடியிலிருந்து பேருந்து விட்டு, பார்ததிபனூரிலிருந்து அதனுடைய பகுதிகளாக இருக்கின்ற மானாமதுரைக்கும், கமுதிக்கும், நரிக்குடிக்கும் சிறப்புப் பேருந்துகளை இயக்குவதற்கு ஆவன செய்வார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி ஒரு பணிமனை பார்த்திபனூரில் அமைக்க முடியுமா என்று கேட்டார்கள். அது இல்லை என்று நான் சொன்னேன். கட் சர்வீஸ் வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு மிக விரைவாக அந்தப் பகுதிக்கு கட் சர்வீஸ் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட் சர்வீஸ் பேருந்து அங்கு விடப்படும் என்று அமைச்சர் கூறினார்கள். அதற்காக நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாளையதினம் நமது மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் என்னுடைய ராமநாதபுர மாவட்டத்திற்கு முதுகுளத்தூருக்கு வருகை தந்து 6 பேருந்து வழித் தடங்களை துவக்குவதற்கும், வரியில்லாத நம்முடைய இந்த பட்ஜெட்டை அந்தப் பகுதி மக்களுக்கு விளக்குவதற்கும் வருகை தர இருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு அமைசசர் அவர்களை என்னுடைய தொகுதி மக்களின் சார்பில், மாவட்ட மக்களின் சார்பில் வரவேற்கின்ற இந்த நல்ல வேளையில், அங்கே வருகின்ற அமைச்சர் இந்த வழித்தடத்தை ஆரம்பிக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மனதிலே கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு நாளை அந்தப் பேருந்தை அந்தப் பகுதியிலே இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 486, திரு. வெ. தமிழரசு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

486—

பைத்தூர் சாம்பக்காடு பகுதியில் ஏரித் திட்டம்

9455*—திரு. வெ. தமிழரசு:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—